மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக, வருகின்ற மே மாதத்திற்குள்ளாகவே தார்ச்சாலை போடப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 520, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

511—

திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை.

*11195—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

520—

பூம்புகார் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள்.

15347—திரு. எம். பூராசாமி:—

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(30-வது பட்டியல்).

1—

சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தர மாக்குதல்.

வினா எண் 11411—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தரமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நிரந்தரம் செய்வதற்கு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து கருத்துரு இதுகாறும் பெறப்படவில்லை இது சம்பந்தமாக கருத்துரு பெறப்பெறும்பொழுது அதனை அரசு பரிசீலிக்கும்.